786

ஹுவல் முஃமினு

ஹிஜ்ரீ 1351-ஹு றபீஉல் அவ்வல்-மீ 12௳

நபிகள் நாயக ஜனன தினத்தன்று

வினியோகிக்கப்பெற்ற

# சாந்தி நபியும் ஸன்மார்க்கமும்.

இஃது

மன்னார்குடி

ஷம்ஸுல் ஹுதா பத்திராதிபர்

பாவலர் சி. மீ. முஹம்மது யூஸுப் ஸாஹிப்

அவர்களால் இயற்றப்பெற்று

மன்னார்குடி

பாரதி அச்சுயந்திரசாலையில்

பதிப்பிக்கப் பெற்றது.

1932.

5 - AUG 1932

ஒ7
N32
149494.

பிஸ்மில்லாஹி

# நூன் முகம்

அன்புமிக்க ஆருயிர்ச் சகோதரீர்!

உலகம் அனைத்தினுக்கும் ஒரு தனிமுதலோனுன எல்லாம் வல்ல இறைவனது இன்னருட்பெற்று அவதரித்த நமது ஆண்டகை முஹம்மது முஸ்தபா ரஸூல் (ஸல்) அவர்களின் எழுதவியலாப் புகழடங்கியுள்ள திவ்விய சரிதத்தை ஒருவாறு சுருக்கமாக எழுதிவிடலாமென்று முன்வந்த எமது துணிவை என்னென்றியம்புவது? நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சரிதையைக் கூறுவதுடனே ஆங்காங்கு வேண்டிய சந்தர்ப்பங்களிற் போதிய சமாதானங்களையும் இயன்றவரை எடுத்துக்காட்டியுள்ளது வாசகர்கட்கு நற்பயனளிக்குமென்றே நம்புகின்றோம். தற்காலத்திய கலாசாலைகளில் அயலவர்களால் இயற்றப்பெற்று வழங்கப்படுகின்ற நாயகமவர்களின் சரித்திரங்களில் உண்மைக்கு மாற்றமான விஷயங்கள் அதிகமுண்டென்பதை எண்பிக்கவே இச்சிறிய நூலை இப்பற்றிச் சொற்பக் கிரயத்திற்கு வெளியிட்டிருக்கின்றோம்.

இஃதன்றி, இந் நூலின்கண் இஸ்லாத்தின் உயரிய தத்துவங்களும் விசால நோக்கங்களும் வெகு தெளிவாய் விவரித்துக் கூறப்பெற்றிருக்கின்றன. இதனுல் இந்நூலை ஊன்றிப் படிக்கின்ற நண்பர்கள் இஸ்லாத்தின் எழில்பெறு கொள்கைகளை ஒருவாறு நன்கு தெரிந்துகொள்வதுடன் இஸ்லாமானது பகுத்தறிவிற்கு எவ்வளவு பொருத்தமானதாயிருக்கின்றதென்பதையும் நன்குணர்ந்துகொள்வார்கள்.

நபிகள் பெருமானுர் (ஸல்) அவர்களின் உண்மைச் சரித்திரச் சுருக்கமும், அவர்கள் நடத்திக் காண்பித்துப் போதித்துச் சென்ற தீனுல் இஸ்லாத்தின் தத்துவங்களும் இந் நூலின்கண் விரிவாகக் கூறப் பெறுவதால் இதற்குச் "சாந்தி நபியும் ஸன்மார்க்கமும்" என்ற பெயரிட்டிருக்கின்றோம். கூடிய சிக்கிரத்தில் இந்நூலை மிக்க விரிவானமுறையில் வெளியிடுவோமென்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்ஙனம்,

பாவலர், மீ. முஹம்மது யூஸுப் ஸாஹிப்

ஸ்ம்ஸுல் ஹுதா ஆபீஸ், மன்னார்குடி.

பிஸ்மில்லாஹி

# சாந்தி நபியும் ஸன்மார்க்கமும்.

5 AUG 1932

## நபிகள் நாயகம்ஸல் அவர்களின் நற்சரிதை

### அவதாரமும் பாலியமும்.

நீர் சூழ்ந்த இப் பூவுலகமானது சென்ற பதினைந்து நூற்றாண்டுகளுக்குமுன் மிகமிகக் கேவலமான நிலைமையில் இருந்து வந்ததென்பது ஒவ்வொரு தேச சரித்திரத்தையும் உற்றுணர்ந்த நிபுணர்கள் ஒருமித்துக் கூறும் உண்மையாகும். அது சமயம் உலகமக்கள் அனைவரும் நீதி அநீதி யுணராமல் மகா மௌட்டியம் வாய்ந்த மூடர்களாயும், எவருக்கு மடங்காத முரடர்களாயும், பஞ்சமா பாதகங்களையும் வெகு பொறுப்புடன் செய்துவந்த பாவிகளாயும், தம்மினும் மெலியவர்களைத் தலைக்காட்டா தொழிக்கும் தூர்த்தர்களாயும், முன்னோர்களிடம் இறைவனால் கொடுக்கப்பட்டிருந்த வேதங்களைப் புரட்டி மாறு செய்கிறவர்களான வம்பர்களாயும் சுருங்கச் சொல்லுமிடத்து மனுஷத்தன்மையே யில்லாத காட்டு மிருகாண்டிகளாயுமிருந்துவந்தனர். ஆதலின், உலகத்தையே சீர்திருத்தும் பொருட்டு ஒரு ஒப்பற்ற தீர்க்க தரிசி வரவேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்தது. ஆகவே ஒரு தேசத்தார்க்கோ ஒரு சமூகத்தார்க்கோ மட்டுஞ் சொந்தமானவரா யில்லாமல், அகில மக்கள் அனைவர்க்கும் கருணாநிதியான ஏக வல்லவனும் இறைவனின் திரு வேதத்தைப் போதித்து, யாவரையும் ஏக சகோதரத் தன்மையிலாக்கி, ஞானந் திகழுஞ் சாந்தியைப் பரத்துகின்ற சன்மார்க்கத் திலகமாய் நபிகள் நாயகம் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அரப் தேசத்தின் தலைநகரமாகிய மக்கமா நகரின்கண் அவதரித்தார்கள்.

திருமக்கமா நகரில் கீர்த்திவாய்ந்த "குறைஷ்" குலத்திலே அப்துல் முத்தலிபின் இளைய புதல்வராகிய அப்துல்லாஹ் என்பவருக்கு அவரது மனைவியார் ஆமினா அவர்களின் உதரத்தினின்று யானையாண்டின் ரபீஉல் அவ்வல் ௴ பிறை 12 (கி—பி 570ம் ௵ ஆகஸ்ட்-௴ 29௳) திங்கட்கிழமை காலை வைகறைப் பொழுதில் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் உதயமானார்கள். (கி—பி 571 என்றும் 576 என்றும் ஒரு சிலர் கூறுகிற்பார். எனினும், மேற்கண்ட வருஷமே தக்க ஆராய்ச்சியின்மீது கண்டுபிடிக்கப்பெற்ற சரியானதாகும்.) இந்தச் சத்தியத் திருநபி (ஸல்) அவர்கள் பிறப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னேயே தந்தையரான அப்துல்லாஹ் காலகதியடைந்துவிட்டார். அவ் விளந்தோன்றலின் ஆறுவது பிராயத்தில் தாயாரான ஆமினாவும் விண்ணுலகெய்தினார். அதன்பின், அந்த

இளம்பருவத்தின் நாயகத்திலகத்தை அவர்களின் பாட்டனூரான அப்துல் முத்தலிப் வெகு பிரியத்துடன் ஆதரித்து வந்தார். இரஸூல் நாயகம் (ஸல்) அவர்களின் எட்டாவது வயதில் அந்தப் பாட்டனூரும் இம் மண்ணுலகை நீத்தார். ஆ! இளம்பிராயத்திலுள்ள எழில் நபியவர்களின் மாதா பிதாவும் போஷகரும் மறைந்த அவசரந்தா னென்னே! உலகத்திற் கெல்லாம் ஒரே தீர்க்கதரிசியாய் வந்த ஒப்பற்ற நபிகள் நாயக மவர்களை இறைவன் தனது வல்லமையைக் கொண்டு ஆச்சரிய மான விதத்தால் போஷித்தா னென்பது தோன்றவே இவ்வாறு மறைத்தருளினன்போலும்!

அதற்கும் பிறகு நாயகமவர்களை அவர்களின் பெரிய தந்தையரான அபூதாலிப் என்பார் பாதுகாத்துவந்தார். அப் பெரிய தந்தைக்குப் பிள்ளைகள் பதின்மர் இருந்தனரெனினும், அவர்களைப் பார்க்கினும் மிகப் பிரீதியுடன் முஹம்மது நபி(ஸல்) அவர்களைப் பேணிவந்தார். அவ்வாறு அவர் பேணுவதற்குத் தக்க காரணமில்லாமற் போகவில்லை. நபிகள் நாயகமவர்கள் இளம்பிராயத்திலிருந்தே பெரியோர்களிடம் மரியாதையாகவும் சிறியோர்களிடம் அன்பாகவும் நடந்துகொள்வார்கள். சிறுவர் களுடைய வீண் விளையாட்டுக்களிற் கலந்துகொள்ளாமலும் துஷ்டர்களுடன் சகவாசஞ்செய்யாமலும் இருந்துவந்தார்கள். பொதுவாக யாவர்க்கும் தங்கள் சிறுபிராயத்திற்குத் தக்கதான உபகாரங்களை அதிக மனவுவப்புடன் செய்துவந்தார்கள். விளை யாட்டிற்சேனும் பொய்யைச் சொல்லாதவர்களா யிருந்ததோடு, தாங்கள் பிறர்க்குச் செய்துள்ள வாக்குறுதியை எவ்விதத்திலும் நிறைவேற்றி வைக்கின்றவர்களாயும் விளங்கினார்கள். இத்தி யாதி சற்குணங்களைக் கண்ட யாவரும் அவர்களை அவ்விளம் பிராயத்திலிருந்தே "அல் அமீன்" (நம்பிக்கைக் குரியவர்) என் றழைத்துவந்தனர். அவர்களின் 14-வது பிராயத்தில் தங்களின் பெரிய தந்தையவர்களுடன் சேர்ந்து ஷாம் (ஸீரியா) முதலிய பகுதிகட்கு வர்த்தகத்தின் பொருட்டுச் சென்றார்கள். அவ்வாறு சென்றபொழுது பல நகரங்களின் நடவடிக்கைகளையும், பல வகை மனிதர்களின் நடையுடை பாவனைகளையும், வர்த்தக முறைமைகளையும் நன்குணர்ந்து கொண்டார்கள். நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வளவிற்கும் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாகவே யிருந்தனர். என்னே! இரஸூல் திலக மவர்களுக்கு இறைவன் கொடுத்திருந்த மகிமை! தனது நபிக்கு மனிதர்களிலிருந்து யாரும் குருவாய் வருதல் தகாதென்பதே அவ் வாண்டவனின் திருவுள்ள நாட்டம் போலும்! இதனால் அந் நாட்டினர் அவர்களை "உம்மீ நபீ" (எழுதப் படிக்கத் தெரி யாத நபீ) என்றும் அழைத்துவந்தனர்.

## விவாக வைபவம்.

இவ்வாறு இரஸூல் நாயகம் (ஸல்) அவர்கள் வர்த்தகத்தில் நல்ல தீக்ஷண்யத்துடனும் பொறுப்புடனும் நடந்து வரும்போது அம் மக்கமா நகரின் பெரிய வர்த்தகரான "குவைலித்" என்பவரின் புதல்வியாகிய "கதீஜா" என்னும் பெருமாட்டியாரவர்களின் வர்த்தகக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும் பொறுப்பை யேற்று, அம் மாதுசிரோமணியின் ஷாம் தேய வியாபாரத்தில் நல்ல ஊதியத்தைக் காண்பித்தார்கள். நாயக மவர்களின் கீர்த்தி வாய்ந்த மேன்மைச் சுபாவங்களையும், வர்த்தகப் பொறுப்பில் ஆற்றுகின்ற சாமர்த்தியத்தோடு கூடிய சாதுரிய உழைப்பையும், களங்கமற்று யாவர்க்கும் நீதிகளைப் போதிக்கின்ற இன்சொல் வன்மையினையும், பிறர் பொருளைக் கவருங் கெட்ட எண்ணமில்லாமல் நாணயப் பொறுப்பில் நடந்து காட்டுகின்ற நன்னடைகளையுங் கண்ட கதீஜா நாயகியவர்கள் தமது 40-வது பிராயத்தில் 25 பிராயமுள்ள நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மணந்துகொள்ள விரும்பினார்கள். அப் பெண்ணரசியார் முன் இருமுறை வாழ்க்கைப்பட்டு அது சமயம் மங்கிலியம் இழந்து விதவையாயிருந்தார்கள். அக்காலத்தில் அரப் தேயத்தில் பெண்கள் பிறந்தால் இழிவெனக் கருதிப் பிறந்தவுடன் பெண் குழந்தைகளை வாள்கொண்டு வெட்டி யெறிந்து விடுவார்கள். இன்றேல் உயிருடன் குழியிற்போட்டுப் புதைத்துவிடுவார்கள். இந்தியாவிலோ, புருஷன் இறந்துவிட்டால் மனைவியையும் உடன்கட்டையேற்றித் தீயிட்டுக் கொளுத்துவார்கள். கைம் பெண்களைக் கண்டுவிட்டால் செய்யப்போகும் காரியங்கள் கெட்டுவிடுமென்று நம்பிப் பெண்களை மிருகத்தினுங் கேவலமாய் நடத்திவந்தனர். உலகத்திலேயே பெண்மணிகளுக்கு இத்தகைய கொடிய நடவடிக்கைகள் இருந்ததைப் பார்த்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விதவைகளைக் காப்பாற்றி உலகத்திற்கே வழிகாட்டும் நல்லெண்ணத்துடன் அந்த கதீஜா நாயகியைத் தங்களின் 25-வது பிராயத்தில் மணமுடித்துக் கொண்டார்கள். அதிலிருந்து தங்களின் 50 வயதுவரை அந்த மூதாட்டியாருடனே மட்டில் ஏக பத்தினி விரதராய் வாழ்ந்தார்களென்றால் அவர்களின் வாழ்க்கையிலிருந்த இச்சையற்ற பரிசுத்தத் தன்மையை எவ்வாறு வருணித்தல் சாலும்?

## நபிப்பட்டமும் நற்பிரசாரமும்

அந்த விவாகத்திற்குப்பின் நாயகமவர்கள் வர்த்தகத்தில் ஈடுபடுவதை நிறுத்திக்கொண்டு, தனித்திருந்து தியானம் புரிவதிலும், தானதர்மஞ் செய்வதிலும், இம்சிக்கப்பட்ட ஏழை எளியோர்க்கு உதவிபுரிவதிலுமே காலத்தைக் கடத்தினார்கள்.

தனித்திரு, பசித்திரு, விழித்திரு என்னும் நியதிக்கிணங்க நடந்துவருகின்ற சாந்தி நபி முஹம்மது (ஸல்) அவர்களின் நோக்கத்தை யுணர்ந்த கதீஜா பிராட்டியாரவர்கள் தம்மாலான உதவிகளையும் பணிவிடைகளையும் மனவுவப்புடன் செய்து வந்தார்கள். இவ்வுலக மக்களின் அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானத்தைப் புகட்டுவதற்கும், யாவரையும் ஏக தெய்வக் கொள்கையினராக்கி நீங்காத சகோதரத்துவத்தில் நிறுத்துவதற்கும் தக்க ஸன்மார்க்கம் ஏக வல்லவனும் இறைவனால் காட்டப்படமாட்டாதா வென்று சதா சிந்தித்துக்கொண்டு, இராப்பகலாய் இறைவனை எதிர்நோக்கியவர்களாய் எம்பெருமான் (ஸல்) அவர்கள் இருந்துவந்தார்கள். அவ்வாறு தனித்திருக்குங்கால் இவர்களின் ஞானக் கண்ணுக்கு விண்ணோர்களாம் "மலக்குகள்" புலப்படுவது வழக்கம் நாயகமவர்களின் 40-வது பிராயத்தில் அந் நகருக்குச் சிறிது தூரத்திலுள்ள "ஹிரா" என்னும் ஒரு மலைக்குகையுள் ரமலான் மாதம் 27ந் தினத்திரவு வானவர் "ஜிப்ரீல்" (அலை) அவர்கள் தோன்றி, நபிகள் நாயகத்தைப்பார்த்து "கண்ணிய மிக்க இறைவனின் திருநாமத்தைக் கொண்டு ஓதுவீராக!" என்று கூறி, இறுகத்தழுவி அந்த நன்னபிப் பெரியார் ஓதும் வண்ணஞ் செய்து அவர்களுக்கு "நுபுவ்வத்" என்னும் நபிப் பட்டத்தைக் கொடுத்தருளினார்கள். இந்த ஞானோபதேசத்தை முஹம்மது முஸ்தபா ரஸூல் (ஸல்) அவர்கள் தங்களின் பத்தினியா ரவர்களுக்குத் தெரிவித்தார்கள். அவர்களின் ஒப்பற்ற சற்குணங்களை அருகிலிருந்து பார்த்துவருகின்ற கதீஜா பிராட்டியா ரவர்கள் நபிப் பட்டத்தை முதன் முதலில் அப்படியே ஒப்புக்கொண்டார்கள். இரண்டாவதாக ஒப்புக்கொண்டவர் அலீ (ரலி) அவர்களாவர்.

நாயகமவர்கள் தங்களுக்குக் கிடைத்த ஞானோபதேசத்தை அந்தரங்கமாகவே வெளியிட்டுவந்தார்கள். எனினும் பகிரங்கமாகப் பரத்தவேண்டுமென்று இறைவனது கட்டளை உண்டான தன்மேல் பகிரங்கப் பிரசாரஞ் செய்ய ஆரம்பித்தார்கள். இவர்களின் புதிய பிரசங்கத்தையும், அப் பிரசங்கத்தில் விளக்கப் பெறுகின்ற ஏக தெய்வக் கொள்கையையும், யாவருஞ் சேர்ந்து சமமாய் வாழவேண்டுமென்கின்ற சமத்துவ—சகோதரத்துவக் கொள்கைகளையுங் கேட்ட அந்த விக்ரஹத் தொழும்பர்களான குறைஷியருக்கு அடக்கொணாத ஆத்திரம் பொங்கிவிட்டது. ஆதலின் பலவகையிலும் துன்பஞ்செய்து முஹம்மது நபி(ஸல்) அவர்களின் பிரசங்கத்தைத் தடுக்கப் பார்த்தனர். ஆனால், சாந்தி நபியவர்களின் சலியாத உழைப்பினாலும், இன்னல் பல பொறுத்து எடுத்துரைக்கின்ற இன்மொழிகளாலும், இவர்களுடைய கொள்கைகளின் சூழ்ச்சியற்ற தன்மையினாலும்

மூன்று வருஷ அரும் பிரசாரத்தின் பயனாய்ச் சுமார் 40 அறிஞர்களை தீனுல் இஸ்லாமாகிய சாந்தி மார்க்கத்தைத் தழுவியிருந்தார்கள். இந்த ஆரம்ப முஸ்லிம்களையும் அந்த அரபிய மறமக்கள் அடாத கொடுமை செய்யத் தலைப்பட்டனர். அம் முஸ்லிம்களுள் தனவந்தர் உட்பட ஏழைகளும் வாயாற்கூற முடியாத விதங்களி லெல்லாம் சித்திரவதை செய்யப்பட்டும், உயிருடனே கொல்லப்பட்டும் இரத்தங் கசிய இம்சிக்கப்பட்டும் ஒருவரேனும் சாந்தி மார்க்கமாகிய இஸ்லாத்தைவிட்டு நீங்கிவிடவில்லை. ஆ! நிரபராதிகளான தீங்கற்ற முஸ்லிம்களின்பேரில் அது காலை செய்யப்பட்டுவந்த கொடுமைகளைக் கேட்பாரற்றிருந்த நெருக்கடியான நிலைமைதா னென்னே!

பெருமுயற்சியுடன் தங்களின் சாந்தி மார்க்கத்தைப் பரத்த வெளிவந்த நபிகள் பெருமானாரவர்கள் எதிரிகளின் அறியாமையாலான கொடுமைகளைப் பொருட்செய்யாமல், கண்ணுங் கருத்துமாய் ஒவ்வொரு பொதுக்கூட்டத்திலும், ஜனங்கள் சந்திக்கின்ற இடங்களிலும், விசேஷ தினங்களிற் கூடுகின்றவர்களிடத்திலும், அயல் நாட்டிலிருந்து வந்துபோகின்ற வர்த்தகக் கூட்டத்தாரிடத்திலும் சுருங்கக் கூறுமிடத்து நாலாறு பேர்கள் ஒன்றுசேர்ந்து நிற்பதைக் கண்டால் அவர்களிடத்திலும் தங்களின் சத்திய மார்க்கத்தைப் போதிக்கலானார்கள். பெருந்திரளான ஜனங்களின் முறையீட்டைக்கேட்ட அபூதாலிபவர்கள் பிரசங்கத்தை நிறுத்துமாறு நாயகத்தினிடங் கூறினார்கள். பெரிய தந்தையரின் தைரியக் குறைவைக் சண்ட சாந்தி நபியவர்கள் என்ன கூறினார்களென்று நினைக்கின்றீர்கள்? "எனது அரிய பெரிய தந்தையே! எனது ஒரு கரத்தில் சூரியனையும் மறுகரத்தில் சந்திரனையுங் கொண்டுவந்துவைத்து எனது பிரசங்கத்தை நிறுத்தவேண்டுமென்று சமாதானஞ் செய்தபோதினுஞ் சரியே இஸ்லாத்தின் பிரசாரத்தை யான் விடப்போவதில்லை; சற்றும் பின்னடையவு மாட்டேன்; என் கடமையைப் பூர்த்திசெய்ய ஆண்டவன் அருள்புரிவான்; ஆதலின் இந்த சாந்தி மார்க்கத்திற்காக யான் என்னையே தியாகஞ் செய்துவிட்டேன்." என்று விழிநீர் ததும்ப வீரியத்துடன் கூறிவிட்டார்கள். என்னே நபிகள் திலகமவர்களின் நல்லுறுதி!

தங்களின் பிரயாசைகள் எவ்வகையிலும் பிரயோஜனங் கொடுக்காததைக் கண்ட குறைஷ் முரடர்கள் ஏகோபித்துக் கூடி பின்னும் இன்னல்மிகப் புரிந்துவந்தனர். இன்னல்களைச் சகிக்க இயலாத முஸ்லிம்கள் நபிப்பட்டத்திற்குப்பின் 5-வது ஆண்டில் செங்கடல் கடந்து, அபிஸ்ஸீனியாவிலிருந்த நஜ்ஜாஷி என்னும் கிறிஸ்தவ மன்னனது பாதுகாப்பிற்குட்

சென்று தங்கிவிட்டார்கள். அவர்களைத் திருப்பிக் கொண்டு வர எதிரிகள் செய்த முயற்சி வீணனது. இதற்குக் காரணம் அம் மன்னன் முஸ்லிம்களின் ஸன்மார்க்கத்தை யுணர்ந்து துன்மார்க்கர்களாகிய குறைஷியருக்கு இடங்கொடுக்காததே யாகும். அதன்பின் சிறுகச் சிறுக 101 முஸ்லிம் ஆண் பெண்கள் வரை அந்த அபிஸ்ஸீனியாவுக்கே சென்று புகலிடந் தேடிக் கொண்டனர்.

பின்னர், நபிகள் நாயகமவர்களின் சத்திய சாந்திமார்க்கத்தில் "ஹம்ஜா" என்னும் நம்பெருமானாரவர்களின் சிறிய தந்தையரும், "உமர்" என்னும் மாபெரும் தலைவரும் சேர்ந்துகொண்டார்கள். இதைக்கண்ட குறைஷியர் அடக்கொணுப் புழுக்கங்கொண்டு நாயகமவர்களின் தந்தை வழியாரான "பனூஹாஷிம்" குடும்பத்தினரையும் முஹம்மது நபி (ஸல்) அவர்களையும் ஒரு மலைக் கணவாயுள்ளே அடைத்து மூன்ருண்டுகள்வரை ஜாதிக்கட்டென்னும் கட்டுப்பாட்டிற்குள் ஒடுக்கிவைத்துவிட்டார்கள். இறுதியில் மக்கமா நகரின் சில இளைஞர்களால் அந்தக் கட்டுப்பாட்டுச் சீட்டு கிழித்தெறியப்பட்டு அந்தக் கட்டுப்பாட்டை விட்டு முஸ்லிம்கள் விடுபட்டார்கள்.

## ஹிஜ்ரத் செல்லல்.

அதன்பின், நபிப்பட்டம் வந்த 10-வது ஆண்டில் அபூத்தாலிபும் கதீஜாப்பிராட்டியும் காலகதியடைந்து விட்டார்கள். இதனுல் எதிரிகளுக்கு இன்னும் மிகுந்த துணிவு ஏற்பட்டதால் கொடுமைகளை மேலும் பலவாருகச் செய்யத் தொடங்கினர். எனவே நாயகமவர்கள் "தாயிப்" என்னும் நகருக்குச் சென்று இஸ்லாத்தைப் பிரசாரஞ் செய்தார்கள். அங்குள்ள இரக்கமற்ற துன்மார்க்கர் பலர் பொடிக்கற்களால் நபிபெருமானு ரவர்களின் காலில் உதிரஞ் சிந்த அடித்துத் துரத்தினர். அத்துணைக் கொடுமைகளையும் பொறுத்துக்கொண்டு மீண்டும் மக்கமா நகர்க்கு வந்து அங்கு விஜயஞ் செய்கின்ற அயலூர் வர்த்தகர்களுக்குத் தீனுல் இஸ்லாத்தை இனிதெடுத்துக் கூறிவந்தார்கள். ஒரு முறை மதீனவிலிருந்து வந்திருந்த அறுவர் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டு தங்களூருக்குச் சென்று அது விஷயத்தைப் பரத்தினுர்கள். நபிப்பட்டம் வந்த 12-வது வருஷம் 75 பேர்கள் மதீனவிலிருந்து வந்து நபிகள் திலகத்தை மதீனவிற்கு வந்துவிடும்படியும் அவர்களுக்காகத் தங்களின் உயிரையுங்கொடுக்கத் தையாராயிருப்பதாகவும் உறுதிகூறினுர்கள். நாயகமவர்கள் அவர்களின் நோக்கத்திற் கிணங்கிய காரணத்தால் முஸ்லிம்கள் அபிஸ்ஸீனியாவுக்குச்சென்ற முஸ்லிமல்லாதாருட்பட சிறுகச்

சிறுக மதீனாவிற்குக் குடியேறிவிட்டார்கள். 13-வது வருஷ ஆரம்பத்திலே, இரஸூல் திலகமவர்களுந் சென்றுவிடலா மென்ற இறைவனின் கட்டளை வந்தது. அவ்வாறு நாயகமவர் களும் புறப்பட இருப்பதை யுணர்ந்த எதிரிகள் ஒரு பெருந் திரளாக உருவிய வாளுடன் வந்து நபிகள்பிரானிருந்த வீட்டை முற்றுகைப் போட்டுவிட்டனர். இரவில் நபிகள் நாயகமவர்கள் அலீ (ரலி) அவர்களை அவ்வீட்டில் தூங்கும்படி செய்துவிட்டு, உறங்கிக்கிடந்த எதிரிகளினிடையே தைரியமாய் நடந்து வெளி வந்து, அத்தியந்த தோழராகிய அபூபக்கர் (ரலி) அவர்களையும் அழைத்துக்கொண்டு "தௌர்" என்னும் மலைக்குகைக்குச் சென்று அங்கேயே மூன்று நாள்வரை தங்கியிருந்தார்கள். அந்தக்குறைஷியர்களான மறமாக்கள் அலீ (ரலி) அவர்கள் சயனித்திருந்த வீட்டை இராமுழுதும் காவல் காத்திருந்து விடிந்தவுடன் விஷயமுணர்ந்து தங்களின் ஏமாற்றத்தால் மனமிடிந்தவர்களாய் மேலும் பன்மடங்கு க்ஷாத்திரங்கொண்டு பல திசைகளிலும் ஓடித்தேடினர். ஒருகூட்டம் தௌர்குகை யினருகில் வந்துங்கூட அக்குகையுள் பார்க்கவில்லை. அது சமயம் அபூபக்கர் (ரலி) அவர்கள் நாயகத்தைப் பார்த்து, "எதிரிகள் அதிகம் வந்துவிட்டனரே நாம் இருவர் மட்டுந்தாமே இருக்கின்றோம்" என்றார்கள். அதற்கு நாயகம் அவர்கள், "அப்படிச் சொல்லாதீர்கள் நம்மிருவருடனே இறைவனு மிருக்கின்றான்" என்று உறுதியுடன் கூறினார்கள். என்னே இரஸூலவர்களின் நல்லுறுதி!

நபிகள் திலகம் (ஸல்) அவர்களும் அபூபக்கர் (ரலி) அவர் களும் ஹிஜ்ரத் சென்று நபிப்பட்டம் வந்த 13-வது ஆண்டு ரபீஉல் அவ்வல்பிறை 8 திங்கட்கிழமை யன்று மதீனா நகர் போய்ச் சேர்ந்தார்கள். இதிலிருந்துதான் ஹிஜ்ரீ வருஷம் கணக்கிடப்படுகின்றது. இவ்வாறு மக்கமா நகரிலிருந்து வடக்கே 300 மைல்கள் தூரத்திலுள்ள மதீனாவிற்குத் தங்க ளின் ஆஸ்தி பூஸ்திதிகளை யெல்லாம் விட்டு விட்டுக் கால்நடை யாய்ச் சென்ற முஸ்லிம்களின் ஹிஜ்ரத்தானது அவர்களின் மார்க்கத் தூய்மையை எண்பித்துக் காட்டவில்லையா?

## தற்காப்பு யுத்தங்கள்

முஸ்லிம்கள் திரு மதீனாவிற்குச் சென்றுவிட்ட பின்பும் குறைஷிக் கொடியர்கள் தங்களின் பகைமையை விட்டார்களல் லர். முதன் முதலில் "உத்பா" என்பவரின் தலைமையில் 1000 போர் வீரர்களை அனுப்பி மதீனாவிலுள்ள முஸ்லிம்களைக் கருவறுத்துவரச் செய்தனர். இனியும் முஸ்லிம்கள் வாளா

பொறுமையுடனிருத்தல் முடியாமலாகிவிட்டது. நாயகமவர்களும் செய்வதற்கு வேறு வழியின்றி இஸ்லாத்தைத் தற்காத்துக் கொள்ளும்பொருட்டுத் தங்களுடனிருந்த சிறுர்களும், முதியோர்களும் வாலிபர்களுமாகிய 313 நிராயுதபாணிகளான முஸ்லிம் விசுவாசிகளுடன் எதிரிகளின் படை வருகின்ற வழியில் வந்து பத்ரு என்ற இடத்தில் எதிரிகளை எதிர்த்துப் போர் புரிந்தனர். அந்தப்போரில் எதிரிகளின் அஜாக்கிரதையால் முஸ்லிம்களுக்கே வெற்றி கிடைத்தது. இப்போரானது ஹிஜ்ரீ 2-வது வருஷம் நடைபெற்றதாகும்.

மேற்கண்ட பத்ரு யுத்தத்தில் எதிரிகளுக்குப் புத்தி வந்ததாகத் தெரியவில்லை. ஏனெனின், மீண்டும் அவர்கள் "அபூஸுப்யான்" என்னும் தலைவனுடன் 3000 வீரர்கள் மதீனாவினருகில் வந்து பாடி வீடு ஏற்படுத்திக்கொண்டார்கள் ஆதலின். முஹம்மது நபி(ஸல்) அவர்கள் தாங்களும் தங்கள் 700 சிஷ்யர்களையும் திரட்டிக்கொண்டு "உஹத்" என்றும் மலையடிவாரத்தில் யுத்தஞ் செய்து எதிரிகளைச் சின்னாபின்னப்படுத்தினார்கள். தோல்வியடைந்து சிதறியோடிய எதிரிகளைக் கண்ட முஸ்லிம் வீரர்களிற் சிலர் தாங்கள் காவல் காத்திருந்த கணவாயின் வழியை விட்டு விலகியதால் எதிரிகளிற் சிலர் அக்கணவாயின் வழியைக் கைப்பற்றிக்கொண்டு முஸ்லிம்களை மீண்டும் மிகக் கடூரமாய் எதிர்த்தார்கள். முஸ்லிம்கள் எதிரிகளுடன் போராடிக்கொண்டே ஒரு குன்றின்மீது ஏறிக்கொண்டார்கள். இதனால் எதிரிகள் ஒன்றுஞ் செய்ய இயலாமல் கலைந்தனர். எனவே இப் போரில் எதிரிகள் வெற்றி பெற்றுவிட்டார்களென்று கூற முடியாது. இல்லை, முஸ்லிம்களுக்குத்தாம் வெற்றி யென்றும் சொல்லமுடியாது. இந்த யுத்தம் ஹிஜ்ரீ 3-வது வருஷத்தில் நடந்ததாகும்.

இங்ஙிலையிற் கலைந்து சென்ற குறைஷியர் இனியில்லாக் கோபங்கொண்டு அரபிய மக்களை யெல்லாம் ஒன்று சேர்த்து 24,000 போர்வீரர்களைத் திரட்டிக்கொண்டு ஹிஜ்ரீ 5-வது ஆண்டில் மதீனாவிற்கே சென்று அந் நகரைச் சூழ்ந்து முற்றுகைப்போட்டு விட்டார்கள். முஸ்லிம்கள் சொற்பத் தொகையினராதலின் 3000 பேர்கள் சேர்ந்து அகழ் தோண்டிக் கொண்டு அவ்வரபிய மறமாந்தரை வெகு தீரத்துடன் எதிர்த்தனர். இப் போர் மூன்று வாரங்கள் வரை நீடித்து நடந்ததால் உணவுப் பொருட்களுக்குத் தோதில்லாமல் எதிரிகள் தாங்களாகவே கலைந்து ஓடிவிட்டனர். இவ்வாறு ஒன்றன்பின் ஒன்றாய்ப் பல்லாயிரக் கணக்கான போர்வீரர்களுடன் வந்து வலுவில் போர் தொடுத்த அந்தக் குறைஷியரின் எண்ணத்திற்கு

மாற்றமாய் ஒவ்வொரு யுத்தத்திலும் முஸ்லிம்களின் தொகை யதிகரித்துக்கொண்டு வந்ததும், எதிரிகளின் நோக்கம் பூர்த்தி யடையாமல் தோல்வி யடைந்ததும் முஸ்லிம்களின் வெற்றி யையே எண்பித்துக் காட்டுகின்றது. என்னே இறைவன் அருள் கிடந்தவாறு! இவைகளைக் கொண்டு உண்மை என்றைக்கும் நிலை நிற்குமென்பது நன்கு புலனாகின்றதே யன்றோ?

பின்பு ஹிஜ்ரீ 6-வது வருஷம் நபிகள் நாதர் (ஸல்) அவர்கள் 1400 தோழர்களுடன் திரு மக்கமா நகர்க்கு ஹஜ்ஜுக்கு செய்யப் புறப்பட்டார்கள். இதுசமயத்தில் அந்தக் குறைஷியப் பகைஞர் "ஹுதைபிய்யா" என்னுமிடத்திற்கு எதிர்நோக்கி வந்து முஸ்லிம்களைத் தடுத்துவிட்டனர். இறுதியில் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார்கள். அதன்படி முஸ்லிம்கள் அடுத்த வருஷம் ஹஜ்ஜுக்கு செய்வதென்றும், மக்காவாசி முஸ்லிமாகி மதீனாவிற்கு ஓடிவிட்டால் அவரை நாயகமவர்கள் திருப்பி யனுப்பிவிடவேண்டு மென்றும்; ஆனால், ஒரு மதீனா முஸ்லிம் இஸ்லாத்தை விட்டு மக்கத்திற்கு வந்து விட்டால் திருப்பி யனுப்பப்பட மாட்டாரென்றும், குறைஷயரின் நண்பர்களை முஸ்லிம்கள் தாக்கக் கூடாதென்றும், அவ்வாறே முஸ்லிம்களின் நண்பர்களைக் குறைஷியர் தாக்கக் கூடாதென்றும் தீர்மானிக்கப் பெற்றது.

இவ்வுடன்படிக்கைக்குப்பின் நபிகள் நாயகமவர்கள் மதீனாவில் அமர்ந்து அரசு புரிய ஆரம்பித்தார்கள். பற்பல மன்னர்களுக்கும் இஸ்லாத்தின் சாந்தி மார்க்கத்தைக் குறித்து நிருபம் எழுதினார்கள். பல அரசர்கள் இஸ்லாத்தின் விசால நோக்கத்தையும், சகோதரத்துவத்தையும், சகல நியதிகளின் அளவையும் உணர்ந்து இந்தச் சாந்தி மார்க்கத்தைத் தழுவி முஸ்லிமானார்கள். இவ்வா றிருந்துகொண்டிருக்கும்போது, குறைஷியரின் நேசக்கூட்டத்தினர் இரண்டாவதாண்டிற்குள் 'ஹுதைபிய்யாவின்' உடன்படிக்கைக்கு மீறி அகாரணமாய்த் தாக்கிவிட்டனர். அதுசமயம் குறைஷியரும் சேர்ந்துகொண்டு முஸ்லிம்களின் நேயர்களைத் தாக்கினார்கள். இதுகாரணம்பற்றி இரஸூல் நாயகமவர்கள் ஹிஜ்ரீ 8-வது வருஷம் ரமலான் பிறை 10ந் தேதி இஸ்லாமியக் கொடி நிழலில் 10,000 முஸ்லிம் வீரர்களுடன் திருமக்கமா நகரை நோக்கிப் படையெடுத்துச்சென்று அந்நகரை ஒரு துளி இரத்தச் சேத மின்றிக் கைப்பற்றிக் கொண்டார்கள். இதன்முன் யுத்தங்களில் மாண்டுபோனவர்களான அபூஜஹ்ல், அபீலஹப், உமையா, ஷைபா, ஸப்வான் முதலிய கொடும் பகைஞர் நீங்க, இறுதிவரை இன்னல்புரிந்து எஞ்சி நின்ற எதிரிகளை யெல்லாம் கருணை நபியவர்கள் அப்படியே மன்னித்து விட்டார்கள்.

இதற்கிடையில் அரப் தேசத்தின் பற்பல பகுதிகளும் சுயமே இஸ்லாத்தில் சேர்ந்துகொண்டு வந்தன. ஹிஜ்ரீ 9ல் ஹஜ்ஜுக்குச் சென்ற முஸ்லிம்களால் நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா ரஸூல் (ஸல்) அவர்களின் அரச விளம்பரம் ஒன்று வாசிக்கப்பெற்றது. அதன்படி இனி விக்ரஹ வணக்கக்காரர்கள் கஃபாவிற்கு ஹஜ்ஜு செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்களென்றும், அதற்குமுன் மௌட்டியமாய்ச் செய்து வந்த நிர்வாணத்துடன் அப் பரிசுத்த ஆலயத்தைக் சுற்றி வருதல் கூடாதென்றும் தடை செய்யப்பட்டது. பின்பு ஹிஜ்ரீ 9-10ல் அரப்தேசத்தின் பற்பல பகுதிகளிலிருந் தெல்லாம் தூதுவக் கூட்டத்தினர் வந்து இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டே யிருந்தனர். நபிகள் நாயகமவர்கள் தங்களின் இளம்பிராயத்தில் திரு மக்கமா நகரையும் கஃபத்துல்லாவையும் எவ்வாறு காண வேண்டுமென்று நாடினார்களோ அவ்வாறே இப்பொழுது கண்டு மகிழ்ந்து, "மிம்பர்" மேடையின் மீதேறி நின்று இறைவனின் ஏகத்துவத்தையும், இஸ்லாத்தின் பரிபூரணத்தையும், சமூகச் சகோதரத்துவத்தையும், உலக வாழ்க்கையின் நியதிகளையும் இனிதெடுத்து விளக்கினார்கள். யாவரும், "சத்தியம் வந்துவிட்டது; அசத்தியம் அழிந்துவிட்டது, திண்ணமாக அசத்தியம் அழியக்கூடியதாகவே யிருக்கின்றது." என்ற வேத வாக்கியத்தின் உண்மைத்தன்மையை உணர்ந்துகொண்டார்கள்.

## இறுதி ஹஜ்ஜும் எம்பிரான் பிரிவும்

ஆரம்பத்திலே தாய் தந்தையற்ற அநாதைச் சிறுவராய், பின்பு பொறுப்புள்ள மேய்ப்பராய், அதன்பின் வர்த்தகத் திலகமாய், பிறகு மணவாள மாண்பராய், அதற்கும் பிறகு போர்வீரப் புருஷராய், மேலும் தவங்கிடந்த தாசராய், இறுதியின் இரஸூலாய், மன்னுநிதி மன்னராய் மார்க்கோபதேசியாய்ச் சகல மக்கட்கும் சற்குருவாய் விளங்கிவந்த சமரஸமூர்த்தியாம் நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா ரஸூல் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரீ 10-வதாண்டு சுமார் ஒரு லக்ஷத்து ஐம்பதினாயிரம் முஸ்லிம் தோழர்கள் புடைசூழத் திரு மக்கமா நகர்க்கு யாத்திரையானார்கள். அங்கே யாவருங் கூடி நாயகமவர்களின் இறுதிப் பிரசங்கத்தைக் கேட்டார்கள். அந்தக்கடைசி ஹஜ்ஜாகிய "ஹஜ்ஜத்துல் விதாஃ"வின் பூர்த்தியுடன் நாயகமவர்கள் திரு மதீனாநகர் வந்து சேர்ந்தார்கள். அதன்பின் சில வாரங்களில் ஹிஜ்ரீ 11-வது ஆண்டு (கி. பி. 632) ரபீஉல் அவ்வல்பிறை 12உ திங்கட்கிழமை யன்று உலக ஞான பிதாவான கருணையங்கடல் ஹபீபுரப்பில் ஆலமீன், காத்தமுன்னபீ முஹம்மது முஸ்தபா ரஸூல் ஸல்) அவர்கள் தங்களின் அறுபத்து மூன்றுவது பிராயத்தில் திரு மதீனா நகரின்கண் இறைவனிட்டுள்ள

கட்டளையின்படி இந்த அநித்திய மண்ணுலகை நீத்து விண்ணுல கெய்தினார்கள். (இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.) ஆ! உலக ஞானசூரியன் இவ்வுலகினைவிட்டு மறைந்ததா? இல்லை, இல்லை. மணங்கமழ் அநித்திய சரீரம் மிகச் சிறப்புடன் நல்லடக்கஞ் செய்யப்பெற, அவ்விரஸூல் கொடுத்தருளிய ஞானசூரியன் உலக முடிவுகாலமட்டும் அதற்குப் பின்பும் மறையாமல் நின்றிலங்கிக்கொண்டே யிருக்கின்றது.

## இஸ்லாத்தின் இருஞ்சோதி

முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு இறைவனால் அருளப்பெற்று, அவர்கள் எடுத்து நடந்து போதித்துச் சென்ற சாந்தி மார்க்கத்தின் தத்துவ மென்ன வென்பதை ஆராய்வோம்:—

உலக மன்பதைகளின் இகபர நற்பயனுக்குப் பற்பல மார்க்கங்கள் இறைவனால் அருளப்பெற்றனவேபோல் இஸ்லாம் மார்க்கமும் அருளப்பெற்றிருக்கின்றது. "இஸ்லாம்" என்பது இறைவனுடைய கட்டளைக்கு முற்றிலும் கட்டுப்படுதல் என்றும் சாந்திக்குள் பிரவேசித்தல் என்றும் பொருள் பெறும். இந்த இஸ்லாம் மார்க்கத்தைக் குறித்து இறைவன் திருமறையாகிய குர்ஆனில் கூறுவதாவது:— "இன்று உங்களுக்காக உங்களுடைய மார்க்கத்தைப் பூர்த்தி செய்துவிட்டேன்; உங்களின் மீது எனது கிருபையை இன்று சம்பூரணமாக்கிவிட்டேன்; உங்களுக்காக இஸ்லாத்தை ஒரு ஸன்மார்க்கமாகத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்" (5:3). "நிச்சயமாக ரக்ஷகனிடத்தில் உண்மையான மார்க்கமாயிருப்பது இஸ்லாம்தான்" (3:18) என்பதே யாகும். இவ்வாறு இறைவன் போற்றியுள்ள இஸ்லாமானது சொல்லளவிலும் எழுத்தளவிலும் உண்மையுள்ள மார்க்கமா யிருப்பதுடனில்லாமல் அம்மார்க்கத்தின் அமைப்பிலும், அதைக்கடைப் பிடிப்பதால் மனிதர்களுக்கு உண்டாகும் நற்பயன்களைக் கொடுப்பதிலும் உண்மையுள்ளதாகவே யிருந்து வருகின்றது. அன்றியும் இறைவன் கூறுவதேபோல் சம்பூரணம் வாய்ந்ததாய்த் தனக்குள் யாதொரு திருத்தமும் வேண்டியில்லாததாய், அகிலத்திலுள்ள அயல் மதவாதிகளால் எடுத்தாளப் பெற்றும் பரவி வருகின்றது. இம்மார்க்கம் உதயமானது நபிகள் நாயகம் அவர்களுக்கு முன்னே அவதரித்துள்ள தீர்க்கதரிசிகளின் ஆரம்பகாலத்திலா யிருக்கும். எனவே, இம்மார்க்கத்திற்கு "இஸ்லாம்" என்றும், இதைப் பின்பற்றுகிறவர்களை "முஸ்லிம்" என்றுமே அழைத்துவரல் வேண்டும். இதையுணராமல் ஒரு சிலர் இம் மார்க்கத்தை "முஹம்மதிய" மார்க்கமென்றும், இதைப் பின்பற்றுகிறவர்களை "முஹம்மதியர்" என்றும் அழைப்பது அர்த்தமற்றதனமே யாகும். எனினும், மனிதர்கள்

தங்களின் அறியாமையால் அடிக்கடி வேத நியதிகளைப் புரட்டிக் கொண்டும், அஞ்ஞானத்துள் ஆழ்ந்து, தங்களிஷ்டம்போல் வெறியாடி அதிக்கிரமங்களைச் செய்துகொண்டும் வந்ததால் இறுதியில் அனைவர்க்கும் அவசியமான சீர்திருத்தங்களுடன் ஒரு வேதம் பரிபூரணத்துடன் வேண்டியிருந்தது. அந்த வேதந் தான் திருமக்கமா நகரில் அவதரித்த முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு இறைவனால் விண்ணவர் மூலமாய் அருளப்பெற்ற திருக் குர்ஆனாகிய திவ்விய கிரந்தமாகும்.

அந்த வேதம் ஒரு குறிப்பிட்ட தேசத்தார்களுக்கோ அன்றி வகுப்பார்களுக்கோ மட்டும் அருளப்பெற்றதா யில்லாமல், அகிலத்திலுள்ள அனைவர்களுக்காகவும் அருளப்பெற்றதா யிருப்பதிலிருந்தே அதன் ஒப்பற்ற விசாலநோக்கம் நனி சிறந்து விளங்கக் கிடக்கின்றது. "ஏ மனிதர்காள்! நிச்சயமாக உங்களனைவர்க்கும் நான் இறைவனின் தூதனாயிருக்கின்றேன் என்று கூறுவீராக" (7:158) "மேலும் எல்லா மனிதர்களுக்கும் நற்செய்தி கூறுகிறவராகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறவராகவு மல்லாமல் நாம் உம்மை அனுப்பவில்லை" (34:28) எனக் கருணாநிதியாகிய இறைவன் முஹம்மதுநபி(ஸல்) அவர்களுக்குக் கூறுவதிலிருந்து இஸ்லாம் மார்க்கம் எல்லா ஜாதியார்க்கும் நன்னெறி காட்டக் கூடியதாய் வந்திருக்கின்றதென்றும், நபிகள் நாயகமவர்கள் சகல மனித கோடிகளுக்கும் ஒரு தயாள மூர்த்தியாகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் அனுப்பப் பெற்றுள்ளார்களென்றும் செவ்விதின் விளங்கிக் கொள்கின்றோம்.

அவ்வாறு உலக மக்கள் அனைவருக்கும் அவரவர் தத்தம் வாழ்க்கையை ஒழுங்குபடுத்தி நடந்துகொள்ளும் வண்ணம் செந்நெறிகளைத் தன்னகத்தே பெற்று வந்திருக்கின்ற இஸ்லாத்தின் கொள்கைகளில், சுய நலங்கொண்டு ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பாரைத் தாழ்த்திவைக்கும்படியான சட்டதிட்டங்களோ, மாந்தர்கள் எளிதில் எடுத்தனுஷ்டிக்க முடியாத சட்டங்களோ, ஒரு காலத்திற்கோ ஒரு இடத்திற்கோ ஒருபோது பொருத்தமுடையதாயிருந்து, பிறகு பொருத்தமற்றதாகித் திருத்தியமைக்கவேண்டிய போதனைகளோ ஒரு சிறிதுமில்லை யென்பது குறிப்பிடத் தக்கதாகும். தீமைகளை விலக்குதற்கு வேண்டிய எல்லாவிதமான உபாயங்களும், ஸன்மார்க்க நடத்தைக்கும் ஆன்ம ஞான முன்னேற்றத்திற்கும் அவசியமாய் வேண்டிய சகலவித உபாயங்களும் இஸ்லாத்தில் நனி சிறந்து காணப்படுகின்றபடியால், இஸ்லாமொன்றே மனிதர்களுடைய எவ்விதத் தேவைகளுக்கும் திருப்தியான வழிகாட்டியா யிருக்கின்றதென்றும், திருக் குர்ஆனே இறுதி வேதமென்றுங் கூறப்பெறுகின்றன.

## மூலக் கோள்கையும் முக்கியக் கடமையும்

"நிச்சயமாக மனிதனை நாம் மேலானவனாகச் சிருஷ்டித்தோம்; எனினும், அவனை அவனுடைய தீச்செயலால் கீழானவற்றிற்கெல்லாம் கீழானவனாக மாற்றினோம்" (95:4,5) எனத் திருக் குர்ஆனில் இறைவன் கூறுகின்றான். எனவே மனித சிருஷ்டியில் உதித்தவன் தனக்கு வெளியாக்கப் பெற்றிருக்கின்ற நேரான ஸன்மார்க்கத்தைச் சீராகக்கடைப்பிடிப்பானாயின் அமரர்களும் தனக்குக் கீழ்ப்படியும்படியான அவ்வளவு மகோன்னத உச்சஸ்தானத்தை அடையலாம். அப்படியின்றித் தன்னையுந் தனது தரத்தையுங் கவனியாதவனாய் மனம்போனபடி இச்சை வயப்பட்டு நடப்பானாயின், கேவலம் மிருகத்தினுங் கீழான இழிய தன்மையில் வீழ்ந்து உழல்வா னென்பதி லென்ன சந்தேக மிருக்கின்றது?

இவ்வுலகின்கண் காணப்படா நின்ற சகல ஜீவ வர்க்கங்களைப் போன்றே நமது இயற்கைத் தன்மையும் ஸ்தூலத்திற்கு வேண்டியவற்றை ஏற்றுக்கொண்டும், வேண்டாதவற்றை விலக்கிக்கொண்டு மிருக்கின்றது. ஸ்தூல தேகத்திற்கு அமைந்திருக்கின்ற இத்தன்மையானது சூக்ஷ்ம தேகத்திற்குத் தானே அமைந்தில்லை. உதாஹரணமாக, ஸ்தூல சரீரத்தினுள் ஏற்படுகின்ற அசுத்தங்கள் சுவாசமாகவும், வியர்வையாகவும், வாந்தியாகவும், மலஜலமாகவும் வெளியிற்றள்ளப்படுகின்றன. இஃது இயற்கையாகவே நடைபெறுவதாகும். இஃதேபோல் சூக்ஷ்ம தேகமாகிய ஆத்மாவிற்கு வேண்டிய ஸன்மார்க்கத்தைத் தானே ஏற்றுக்கொண்டு வேண்டாத துன்மார்க்கத்தை வெறுத்துத் திரஸ்கரிக்குஞ் சக்தியானது மனத்திற்குச் சுபாவத்திலேயே அமைந்தில்லை. இதனாற்றான், "மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என்ற நீதி வாக்கியமும் உண்டாயது. ஆகவே, மனத்திற்கு வேண்டியவைமீது விருப்பையும் வேண்டாதவைமீது வெறுப்பையும் உண்டாக்க வேண்டுமானால் அது பழக்கத்தினாலேயே சாத்தியமாகும். அத்தகைய உயரிய பழக்க வழக்கங்களை உண்டுபண்ணுவதற்குச் சாதனமான சட்ட திட்டங்களடங்கிய வேதத்தை மனக்குரங்கின் வயப்பட்டுக் கிடக்கின்ற ஒரு மனிதன் தானே இயற்றிவிடுதலென்பது முடியாத காரியமேயாகும். ஆதலின், அந்த வேதம் யாவரையுஞ் சிருஷ்டித்துப் பரிபாலிக்கின்ற ஏக ரக்ஷகனாலேயே அருளப் பெற்றிருக்கின்ற தென்பதும் அதைக் கடைப்பிடித்து நடப்பதே உலக மன்பதைகளின் கடமை யென்பதும் இஸ்லாத்தின் கொள்கையாகும்.

குர்ஆன் திருமறையானது மானிட உற்பத்தியைப் பற்றி இவ்வாறு கூறுகின்றது:— முதன் முதலில் மண்ணின் சாரமா

யிருந்து பின்னர் உயிர்க்கிருமியாகவும், அதன்பின் கர்ப்பாசயத்தில் கட்டியாகவும், பின்பு சதையாகவும், பிறகு அதனுள் தசை யெலும்புகளாகவும், அற்கும் பிறகு அவ் வெலும்புகள் தசை நாரால் மூடப்பட்டுப் பிண்டமாகவும் இறுதியில் ஏழாவது நிலைமையில் வேறோர் உருவாகவும் அமைகின்றது. (23:12-14) இந்த ஏழாவதான புதிய சிருஷ்டிதான் மனித உணர்ச்சியாக இருக்கின்றது. இதுதான் இதற்குமேல் விருத்தியாகக்கூடிய எல்லாவற்றிற்கும் அஸ்திபாரமாயிருப்பது. மனிதனுடைய ஜீவ உணர்ச்சியில் அவனது ஆத்மாவானது தன்னுடைய ஆரம்பஸ்திதியில் மறைந்து கிடக்கின்றது. இவ்வாறு ஒளிந்து கிடக்கின்ற ஆத்மாவானது பிண்டத்தின் ஏழாவது நிலைமையில் மலரத் தொடங்குகின்றது. அதன் பின் அந்த ஆத்மாவின் அபிவிருத்தியானது தேகத்துடன் வளர்ந்தோங்கி வருகின்றது.

இஸ்லாத்தின் போதனைப்படி ஆத்மாவின் படித்தரமானது ஏழுவகையான நுட்பப் பாகுபாடுகளாகப் பிரிக்கப்படுகின்றது. (1) தீமையைச் செய்யத் தூண்டுதல் செய்கின்ற ஆத்மாவிற்கு "அம்மாரா" என்றும், (2) தன்னிடத்தே குற்றங்காணும் ஆத்மாவிற்கு "லவ்வாமா" என்றும், 3) சுயமே உணர்ந்து கொள்ளும் ஆத்மாவிற்கு "முல்ஹிமா" என்றும். (4) சாந்தி நிலையை அடைந்திருக்கின்ற ஆத்மாவிற்கு "முத்மஇன்ன" என்றும், (5) ரக்ஷகனுல் திருப்தியடையும் ஆத்மாவிற்கு "ராலிய்யா" என்றும், (6) ரக்ஷகனுக்குத் திருப்தி செய்கின்ற ஆத்மாவிற்கு "மர்லிய்யா" என்றும், (7) பரிபூரணமான ஆத்மாவிற்குக் "காமிலா" என்றும் பெயர். எனவே, இஸ்லாமானது தீங்கு செய்யத் தூண்டுவதா யிருக்கின்ற நிலையிலிருந்து ஆத்மாவைப் பரிபூரண நிலைமைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கின்றது அந்த ஆரம்ப நிலையிலுள்ள ஆத்யா "எல்லாம் என்னுடையதே" என்ற மிருக சுபாவத்தில் நிற்கின்றது. இரண்டாவது நிலைமை "உன்னுடையது உனக்கு, என்னுடையது எனக்கு" என்பதாகும். மூன்ருவது சாந்தி நிலையோ "எல்லாம் உன்னுடையதே" என்றுணர்வதாகும். "என்னுடையது" அன்றி 'உன்னுடையது' என்று பிரித்துணரும் வேற்றுமையற்றுப் பரிபூரணமாய் நிற்கும் நிலைமையே மனித கோடிகளின் மகோன்னத நிலையாகும். அத்தகைய உச்சஸ்தானத்திற்கு மனிதர்கள் உயர்ந்துவரும் வண்ணம்போதிக்கவே தீர்க்கதரிசிகளை எல்லா ஜாதியாரிடத்தும் அனுப்பியிருப்பதாக ரக்ஷகன் கீழ்க்காணுமாறு அருளுகின்ருன்:— "அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர் அவதரிக்காத ஜாதியார் ஒருவருமில்லை" (35:24) "நீர் மனிதர்களை அவர்களுடைய ரக்ஷகனின் அனுமதியைக்கொண்டு காரிருளினின்றும் பேரொளியின் பக்கம் கண்ணியமிக்கவனும் புகழுக் குரிய

வனுமாகிய (இறை)வனின் நன்னெறியின் பக்கம் கொண்டுவரும் பொருட்டு நாம் உமக்கு வெளியாக்கித் தந்த வேதம் (இதுவாகும்.)" (14:1) என இறைவன் கூறுவதினின்று தீர்க்கதரிசிகளின் அந்தஸ்தும் வேதங்களின் நற்பயனும் இனிது விளங்குகின்றன.

இவ்வாறுள்ள மூலக் கொள்கைகளை உறுதி கொள்வது இஸ்லாத்தின் முதன் முதலான கடமையாகும். அந்த உறுதிப்பாட்டை ஆறு அம்சங்களாகப் பிரித்து ஒப்புக்கொள்ளல் வேண்டும். அவையாவன:— (1) ரக்ஷகன் ஒருவன் உண்டு. (2) அமரர்கள் உண்டு. (3) வேதங்கள் உண்டு. (4) தீர்க்க தரிசிகள் உண்டு. (5) இறுதித் தீர்ப்பு நாள் உண்டு. (6) நன்மை தீமைகளின் பாகுபாடுகள் இறைவனைக்கொண்டே பூர்த்தியாகின்றன என்று ஒப்புக்கொள்ளலேயாகும். இந்த ஆறு அம்சங்களும் இஸ்லாத்தின் ஆணிவேர்களே போன்று இருக்கின்றன. இவ்வாறு ஒப்புக்கொள்கின்ற எந்தப்பகுத்தறிவுள்ள மனிதனும் தன்னிஷ்டத்திற்கு மனம்போனபடி நடக்கமாட்டானென்றும், அப்படி நடக்க மனசாக்ஷி இடங்கொடாதென்றும் புலனாகின்றதேயன்றோ?

மனிதன் பாபச்சேற்றிலும் கருமக்கடலிலும் சிக்கிக்கொண்டு உழல்வதாகச் சுத்த சத்திய இஸ்லாமானது போதிக்கவில்லை. அன்றியும், மனிதர்களின் பாவங்தொலைய எந்தத் தீர்க்கதரிசியாவது இரத்தஞ்சிந்த வேண்டியதென்றும் இஸ்லாம் கட்டளையிடவில்லை. ஆனால், என்ன கூறுகின்றதென்றால்:— ஒருவர் சுமையை மற்றவர் மாற்றிக்கொள்ளுதல் முடியாது"—(2:48) என்றும், "அவிசுவாசிகள் நன்னம்பிக்கை கொள்ளாதவர்களாயிருப்பதனால் உம்முடைய ஆத்மாவை நீர் (துயரத்தினால்) மாய்த்துக் கொள்வீரோ"?—(2:63) என்றுந்தான் கூறுகின்றது. மேலும், ஒருவன் தான் முயற்சித்த அளவுக்கே நற்கூலியைப் பெற்றுக்கொள்வானென்பது இஸ்லாத்தின் எழில் பெறு உபதேசமாகும். ஆதலின், மனிதருடைய அறிவையும் ஆக்கையையும் போஷிப்பதற்குச் சில அப்பியாசங்கள் இருப்பதேபோல் ஆத்ம விருத்திக்குத் தக்க அப்பியாசங்கள் இருக்கின்றன. அவைகளை ஒவ்வொரு மனிதனும் அப்பியசித்து ஆத்ம சாந்தியடைதல்வேண்டும். இத்தகைய பாடங்களைத்தாம் இஸ்லாம் மார்க்கம் வெவ்வேறு படித்தரங்களாய்ப் போதிக்கின்றது. மனிதர்களுக்கு உட்பகையாய்த் தோன்றுகின்ற காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் முதலான தீய குணங்களை விலக்கி, அருள், அன்பு, ஈவு, இரக்கம், பொறுமை, சாந்தம், சகிப்புத்தன்மை முதலான சற்குணங்களையுண்டுபண்ணத் தக்கனவாகவும், ஆத்ம அபிவிருத்திக்கும்

சமூக முன்னேற்றத்திற்கும் நற்பயனளிக்கக் கூடியனவாகவுமுள்ள ஐந்து கடமைகளை இஸ்லாமானது ஏற்படுத்தியிருக்கின்றது. இவைதாம் இஸ்லாத்தின் ஐந்து தூண்களெனக் கூறப்பெறுகின்றன. அவையாவன:—

(1) இவ்வண்டகோளத்தில் ஒரே தெய்வத்தைத் தவிர வேறு எதுவும் தெய்வ மாகாதென்றும், முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அவ்விறைவனின் திருத் தூதரென்றும் மனவுறுதி கொண்டு கூறுதல். (2) தினம் ஐம்முறை தொழுதல். (3) வருஷத்தில் ஒரு மாதத்திற்கு நோன்பு நோற்றல். (4) வருஷத்தில் எச்செலவும் போக ஐம்பது ரூபாய்ச் சில்லறை மிச்சப்பட்டால் அதில் ஒன்றேகால் ரூபாய்ச் சில்லறை (கிட்டத் தட்ட நூற்றுக்கு இரண்டரை) யை ஏழைவரி கொடுதல். (5) போதிய பொருளும் பலமும் உள்ளவர்கள் திரு மக்கமா நகர்க்கு ஆயுளில் ஒரு முறை யாத்திரை செல்லல் என்பவைகளே யாகும். இவ்வைந்து முக்கியக் கடமைகளால்மாந்தர்க்கு உண்டாகும் நனிதகை நற்பயனைக் கவனிப்பாம்:—

யாவையும் சிருஷ்டித்துக் காத்து அழிக்கக்கூடிய இறைவன் ஒருவன் உண்டென்றும் வேறு யாதும் கடவுளாகமாட்டாதென்றும் உறுதி கொள்வதால் அது மூடநம்பிக்கையும் ஜாதிப் பிரிவுகளையும் உண்டுபண்ணுகின்ற விக்ரஹ வணக்கத்தைக் கட்டோடே ஒழிப்பதாகின்றது. இறைவனது சிருஷ்டிப்பொருள்களில் எதையும் கடவுளுடைய ஸ்தானத்தில் வைத்தெண்ணத் தகாதென்பதே இஸ்லாத்தின் கண்டிப்பான கொள்கையாகும். ஏனெனின், மனிதனைத் தனது "பிரதிநிதி" யாகவும், சகல சிருஷ்டிகளினும் சிரேஷ்டனாகவுஞ் சிருஷ்டித் திருப்பதாய் ரக்ஷகன் தானே கூறுகின்றான். மனிதனின் உயர்வு அங்ஙனமிருக்க, இறைவனின் பிரதிநிதியாய் வந்த பகுத்தறிவுள்ள மனிதன் தன்னினுந் தாழ்ந்தவற்றுக்குத் தனது சிரசைத் தாழ்த்தி வணக்கம் புரிவது ஒரு புறத்தில் தகுதியற்றதாயிருப்பதுடன் மறுபுறத்தில் மனிதனின் பகுத்தறிவிற்கு இழுக்கையுண்டுபண்ணுவதாயு மிருக்கின்றது. இதனால் ஏக தெய்வ வணக்கத்திற்குப் பங்க முண்டாகின்ற தென்பதே இஸ்லாத்தின் நோக்கமாகும்.

அவ்வாறு ஒப்புக்கொண்டவர்கள் அவ்வொப்பரும் தனி முதற் றலைவனைத் தினந் தினமும் ஐந்து முறை அரசன், ஆண்டி, கற்றோர் மற்றோர் என்ற வேறுபாடின்றி வரிசையாய் நின்று வணங்கக் கடமைப்பட்டிருக்கின்றார்கள். அங்ஙனம் வணங்குங்கால் புலன்களைச் சிதையவிடாமல் யாவரும் ஒரு திசைநோக்கி வேறு சிந்தனையற்றுத் திரிகரண சுத்தியாய் இருப்

பதால் புலனடக்கமும் ஆத்ம விருத்தியோடு கூடிய சாந்தியு முண்டாகின்றது. மேலும், சமத்துவ உணர்ச்சியும் சமூக ஒற்றுமையும் விரவுகின்றது. ரக்ஷகனிடத்து மக்கள் யாவருஞ் சமமேயென்ற நியதி புலனாவதுடன் மனிதன் தன்னையே முற்றும் இறைவனுக்கு அர்ப்பணஞ் செய்ய வேண்டியவனாயிருக்கின்றா னென்பதும் இனிது விளங்குகின்றது. அன்றியும், ஒவ்வொரு நாளும் ஐம்முறை அர்த்த ஸ்நானஞ் செய்வதாலும் நின்று, குனிந்து, இருந்து, வணங்கித் தொழுவதாலும் சரீர சுத்தமும் தேக திடனும் விருத்தியாகி, ஆத்ம பலத்திற்குத் துணை புரிகின்றதாக ஆகின்றன. ஆகவே இத் தொழுகையானது தோட்டிமுதல் தொண்டைமான் வரையுள்ள யாவருங் கூடிய தொரு சமூக யோகாப்பியாசமாகவே தினந்தினம் தலைசிறந்த நலன்களை இனிது பயக்கின்றது.

வருஷத்திற் கொருமுறை "ரமலான்" என்ற மாத முழுவதும் பகற்போதில் உண்ணா விரத மிருப்பதால் ஒரு வகையில் உணவு இச்சையும்போக இச்சையும் தணிந்து சமப்படுவதுடன் ஐம்புலக் குதூகலம் அடங்கி ஆத்ம சாந்தி யேற்படுகின்றது. ("அன்னம் ஒடுங்கினால் ஐந்தும் ஒடுங்கும்" என்ற முதுமொழி ஈண்டு இனிது நோக்கற்பாலதாகும்.) மறுவகையில் உடலொட்டிய நோய்கள் நீங்கிச் சரீர சுகம் உண்டாகின்றது. ("லங்கணம் பரம ஔஷதம்" என்பதொரு பழமொழி) அன்றியும் தனவான் ஏழை என்ற வேறு பாடும், தனவான்கள் ஏழைகளின் பசியுணராத் தன்மையும் நீங்கி விடுகின்றது.

நூற்றுக்கு இரண்டரை வீதம் ஏழைவிகிதங் கொடுப்பதால் "தான் தேடினது தனக்கே" என்று இறுமாந்திருக்கின்ற ஆணவம் விலகுவதுடன், அதில் ஏழைகளுக்கும் உரிமை ஏற்படுகின்றது. இதனால் ஒருவர்க் கொருவர் நீங்காத சகோதரத்துவம் தானே உண்டாகின்றது. கூன், குருடு நொண்டி, முடம், செவிடு, ஊமை முதலான அங்க ஹீனர்களுக்கும் பேருதவி புரிகின்ற தாகின்றது.

இறுதிக் கடமையாகிய திரு மக்கமா நகர்க்கு யாத்திரை சென்று அங்கே எத்தேசத்தார்களாக யிருந்தாலும் ஒரே வெள்ளை யுடையைத் தையலில்லாமல் உடுத்திக்கொண்டு இறைவனிடம் பிரார்த்தனை புரிதல் உலக ஜனங்களின் ஒற்றுமையையும் உண்மையான சமத்துவத்தையும் வளர்க்கின்றது. அன்றியும் ஒருவர்க் கொருவர் நிலைமை யுணர்ந்துகொள்ளவும் உதவி புரியவும் வசதி எற்படுகின்றது. மேலும், யாவரும் தமது இல்லந்துறந்து இறைவனது வழியிற்றிரும்பிவிட மனோவார்மை கொண்டுள்ளார்க ளென்பதையும் எண்பிக்கின்றது. இவை

யன்றி. உலக வியவகாரங்களும் தேச அமைப்பும் உணர்ந்து கொள்ள ஹேது உண்டாகின்றது. அந்தச் சமயத்தில் யாவரும் "நான்" "எனது" எனக்கொண்டுள்ள பொய்ம் மயக்கந் தீர்ந்து "யாவும் உன்னுடையதே" என்ற தியாக புத்தியுடன் விளங்குகின்றார்கள். இவையன்றி,

மேற்கூறப் பெற்றுள்ள முக்கியக் கடமைகள் நித்திய அனுஷ்டானத்திலிருந்து வருவதுடன், பொதுப் படையாய்ச் சமூக முன்னேற்றத்தை யுண்டுபண்ணுவதான பற்பல கொள்கைகள் இன்றும் அனுஷ்டானத்தி லிருந்துவருகின்றன. உதாஹரணமாய், உலக ஜனக் கணிதத்தில் சரிபாதிப் பேர்களான பெண்மணிகளுக்குவேண்டிய சொத்துரிமை, விதவா விவாகம், விவாக ரத்து, பெண்கல்வி முதலான அவசியமான உரிமைகளைக் கொடுக்கும்படி இஸ்லாம் வலியுறுத்திப் போதிக்கின்றது. பெண்மணிகளைப்பற்றி இறைவன் குர்ஆன் திருமறையின் ஓரிடத்திற் கூறுவதாவது:— "மேலும், புருஷர்களுக்குப் பெண்ஜாதிகளின் மீது பாத்தியதைகள் இருப்பதே போன்று, அவர்களுக்கும் (புருஷர்களின் மீது) பாத்தியதைகள் இருக்கின்றன. மேலும் ஆடவர் பெண்டிரைக் காட்டினும் சிறிது அந்தஸ்துடையராவர்."— (2:228) என்பதேயாகும். இதனாற்றான் நபிகள் நாயக மவர்கள், "ஸ்திரீ ரத்தினங்களின் பாத்தியதையானது மகா பரிசுத்தமுடையதா யிருக்கின்றது. ஆதலின் அவர்களுக்குரிய பாத்தியதையானது பாதிக்கப்படாமலிருக்கும்படியான வழியில் நடந்துகொள்ளுங்க"ளென்று போதித்துள்ளார்கள்.

மேலும், தீண்டாமை என்னும் பேயை அடியோடேயொழித்துச் சமத்துவம் சகோதரத்துவம் என்னும் ஐக்கிய பாந்தவ்யத்தை இஸ்லாமானது உலகில் நிலை நிறுத்தி யிருக்கின்ற தென்பதை யாரே மறுக்கவல்லார்? ஒற்றுமைக்கும் பகுத்தறிவிற்கும் பங்கத்தை உண்டுபண்ணும்படியான வட்டி வாங்குவதையும் மதுவருந்துவதையும் கண்டித்து விலக்கி யிருக்கின்றது. சமூக வாழ்வில் அசட்டுத்தனமான மனப்பெருமையைக் காட்டிச் சமத்துவத்தைப் போக்கடிக்கக்கூடியதான பட்டுடுத்துவதையும் தங்கம் பூணுவதையும் புருஷர்களுக்கு விலக்கலாக்கி யாவரையும் வேற்றுமையின்றி வாழச் செய்திருக்கின்றது. உலக சமாதானமும் ஒருவர்க் கொருவர் ஐக்கியமும் ஏற்படும் வண்ணம் ஒருவரை யொருவர் சந்தித்தால் "சாந்தி உம்மீது உண்டாவதாக!" என வாழ்த்தும்படி இஸ்லாம் கட்டளையிட்டிருக்கின்றது. இவ்வாறு வாழ்த்துவதால் ஒரு வகையில் ஒற்றுமையும் அன்பும் ஒருவர்க்கொருவர் உண்டாவதுடன், மறு வகை

யில் 'மனிதன் அடையக்கூடியது சாந்தி நிலையே' என்று நிமிஷத்திற்கு நிமிஷம் ஞாபகப்படுத்துவதுமாகின்றது.

மேற் கூறப்பெற்றுள்ள எல்லாவிதமான மூலக் கொள்கைகளினின்றும் இஸ்லாமானது மனிதர்களிடத்தே இரண்டுவிதப் பிரயோஜனத்தை எதிர்நோக்கி நிற்கின்றது. ஒன்றாவது பராபரனுக்கு முற்றும் கட்டுப்படுதலாகும். இரண்டாவது மனிதர்களுக்கு நன்மை செய்வதாகும். இதைக் குறித்துத்தான் கீழ்க்காணும் திருமறைத் திருமொழி நன்கு விளக்குகின்றது:- "அவ்வாறில்லை, ஆயினும் எவரொருவர் ரக்ஷகனுக்கு முற்றுந் தலை சாய்த்து (மனிதர்களுக்கு) நன்மை செய்கிறவராயிருக்கின்றாரோ அவரது சன்மானமாகிறது அவருடைய இறைவனிடமிருக்கின்றது; மேலும் அவர்களுக்கு (யாதொரு) அச்சமுமில்லை, அன்றியும் அவர்கள் துயரப்படவுமாட்டார்கள்' (2:112) "மனிதர்களிடம் அன்பு வைக்காதவர்களிடம் இறைவனும் அன்பு வைக்கமாட்டான்" என்று இஸ்லாம் உபதேசிக்கின்றது.

## இஸ்லாமும் ஸமரஸமும்.

இஸ்லாம் மார்க்கம் ஒரு குறிப்பிட்ட வகுப்பார்க்கின்றி அகில மக்கள் அனைவர்க்காகவும் அருளப்பெற்றிருப்பதிலிருந்து அதன் ஸமரஸப் பான்மை "குன்றின்மீ திட்ட தீபம்" போல் நனி சிறந்து விளங்குகிறது. இதற்கு முன்னுள்ள சகல ஜாதியார்களுக்கும் அருளப்பெற்றுள்ள வேதங்களையும் தீர்க்கதரிசிகளாம் சிரேஷ்டர்களையும் இஸ்லாம் ஒப்புக்கொள்கின்றது. இஸ்லாத்தை ஒப்புக்கொள்ளாதவர்களைப் பற்றிக் கூறுங்கால், "மத விஷயத்தில் பலவந்தமில்லை; (ஏனெனின்) மெய்யாகவே சரியான மார்க்கமானது தவறான மார்க்கத்தினின்றும் விளக்கமாக வேறாக்கப்பட்டிருக்கின்றது"— (2:226) என்று இஸ்லாம் எச்சரித்திருக்கின்றது. ஆசையாற்றான் நபிகள் நாயகமவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:— இஃது என்னுடைய மார்க்கம் மட்டுமல்ல; உங்களுடைய மார்க்கமாகவும் அமைந்திருக்கின்றது. இதுதான் சகல மதங்களின் உண்மையாயிருத்தல் வேண்டும். இஃது என்னுடைய மார்க்கத்தின் உண்மைக்குமட்டும் சாட்சியங் கூறக்கூடிய வேதமாயில்லை; உங்களுடைய மதத்தின் உண்மைக்காகவும் சாட்சியங் கூறிக்கொண்டு, உங்களுக்கும், எனக்கும், மற்றுமுள்ள ஒவ்வோர் ஆண் பெண்ணுக்கும், எல்லா மதங்களிலுங் காணப்படக் கூடிய பொய்யினின்றும் வேறாகிய மெய்யின் வழியையே காண்பித்துக்கொண்டிருக்கின்ற உங்களின் வேதமாகவும் இஃது அமைந்திருக்கின்றது," என்றும், ஆண்டவனுடைய சிருஷ்டிப்பொருள்களிடம் பிரியம் பாராட்டுகிறவரிடம் அந்த ஆண்டவனும் பிரியம் பாராட்டுகின்றான்;

ஆதலின், நல்லவனாயினும் கெட்டவனாயினும் யாராயிருப்பினும் இவ்வகிலத்திலுள்ள மனிதர்களிடத்தில் பிரியமாயிருங்கள்; தீய மனிதனிடத்தில் பிரியமாயிருப்பதால் அவன் அத் தீமையினின் றும் விலகுகின்றான்; இதனால் விண்ணவர்களும் உங்களிடத்தே பிரியமாயிருப்பார்கள்" என்றும் நபிகள் பிரான் (ஸல்)அவர்கள் மொழிந்தருளி யுள்ளார்கள். இவ்வுபதேசத்தி லிருந்து இஸ்லாம் மக்களிடத்து எத்துணைப் பரஸ்பர சமரஸத்தைக் காட்டு கின்றதென்பது எந்தச் சாமானிய அறிவுடையோர்க்கும் விளங் காமற் போகாது.

## இஸ்லாத்தின் அபிவிருத்தி.

இத்தகைய சமரஸ ஸன்மார்க்கத்தின் கொள்கைகளை யுணர்ந்த மனித கோடிகள் அத்தியந்த விசுவாசத்துடன் இம் மார்க்கத்தைக் கடைப்பிடிக்க முற்பட்டுவிட்டனர். நபிகள் நாயகமவர்களின் காலத்திலிருந்து சுமார் ஆயிரத்துச் சில்லறை வருஷங்களுக்குள்ளேயே உலக ஜனங்களில் சுமார் அறுபத் திரண்டு கோடிக்கு மேற்பட்ட அறிஞர்கள் இஸ்லாத்தைத் தழுவி யிருக்கின்றனர். இதற்குக் காரணம் இம் மார்க்கத்தின் கொள்கைகள் மனிதர்களுக்குச் சமத்துவத்தையும் சகோதரத் துவத்தையுங் கொடுத்து, ஒவ்வொருவரையும் அவர் ஆணை னும் பெண்ணைனும் சுதந்தரத்துடனும் சுயமரியாதையுடனும் இன்ப வாழ்வில் திகழும்படி செய்ததே யாகும். இதுபோது இவ் வகிலத்தின்கண் புதிது புதிதாய்த் தோன்றுகின்ற சீர் திருத்தக்காரர்களான அயல் மதவாதிகள் அனுஷ்டிக்க முற் பட்டிருக்கின்ற விக்ரஹ விலக்கு, தீண்டாமை யொழித்தல், விதவா விவாகம், விவாக ரத்து, பெண்கட்குச் சொத்துரிமை முதலான மக்களுரிமைகளனைத்தும் ஆயிரத்து முந்நூற்றைம் பது வருஷங்களுக்கு முன்னேயே வெளிவந்து முஸ்லிம்களால் ஒவ்வொரு நாளும் எடுத்தனுஷ்டிக்கப் பெறுகின்ற கொள்கை களே யாகுமென்பது மிகைபடக் கூறியதாகாது. இஃதொரு பக்கல்கிடக்க.

இஸ்லாத்தின் அபிவிருத்திக் காரணத்தை யுணர்ந்துகொள் ளுஞ் சக்தியற்ற சிலர், "இஸ்லாம் வாளைக்கொண்டு பரவியது" என்று பொய்ப் பிரசாரஞ் செய்து ஹிந்து முஸ்லிம்களுக்குள் இருந்துவருகின்ற சகோதரத்துவத்தைக் கெடுத்துத் துவே ஷத்தையுண்டுபண்ணி வருகின்றனர். என்னே இக்காலத்தின் திரிபு! "மத விஷயத்தில் பலவந்தமில்லை" என்று போதிக்கின்ற இஸ்லாம் மார்க்கம் வாளாயுதத்தைக் கொண்டு பரத்தப்பட்ட தென்பது ஆச்சரியப்படத் தக்கதொரு விஷயமாகவே காணப் படாநின்றது. அவ்வாறு கூறுகின்ற மேதாவிகள் என்ன

ஆதாரம் காட்டுகின்றனரென்றால், முகலாய மன்னர்கள் இந்தியாவில் படையெடுத்தக் காலத்தையே காட்டுகின்றனர். அம் மன்னர்கள் அரசியல் விஷயமாய்ப்போர் தொடுத்தனரே யன்றி மத விஷயமாய்ப் போர் தொடுத்தன ரல்லர். போரிடுங் காலங்களில் எதிரிகளுக்குச் சொந்தமான பலவற்றையும் நாசப்படுத்தல் இன்றளவும் பிரத்தியக்ஷப் பிரமாணமாய்க் காணக்கூடிய விஷயமாகவே யிருந்துவருகின்றது அவ்வாறு அது சமயம் பல கோயில்களும் பற்பல மஸ்ஜிதுகளும் இடிந்தே தகர்ந்திருக்கின்றன. அவ்வரசர்களின் ஆட்சி ஊன்றிவிட்ட பின் முஸ்லிம் அரசராயுள்ள ஔரங்கஜேப் அரசரால் எத்தனையோ ஆலயங்கள் சிர்பெற்று மானியம் விடப்பெற்றுச் செப்புப் பட்டயத்துடன் இன்றளவும் வடநாட்டில் விளங்குகின்றன. அவர் ஆரம்பத்தில் போர்தொடுத்தது மத விஷயத்தினு லென்றால், அவர் தமது அதிகாரஞ் செல்லக்கூடிய காலத்தில் கோயில்களைப் புதிப்பிக்கவும் மானியம் விடவும் ஏற்பட்டிருக்காது. அதுபோது கிட்டத்தட்ட எண்ணூற்றைம்பது வருஷங்கள் வரை முஸ்லிம்கள் இந்தியாவை அமைதியுடன் ஆண்டுவந்தார்களென்பது சரித்திர முணர்ந்தவர்கள் ஒப்புக்கொள்ளும் உண்மையாகும். அன்றியும் ஆங்கிலேயர் ஆட்சியின் ஆரம்பக் காலத்தில் இந்தியாவின் ஜனத்தொகையில் பத்திலொரு பங்கினரே முஸ்லிம்கள் இருந்தனர். இப்போது அபிவிருத்தியினுல் சுமார் நாலிலொரு பங்கினர் முஸ்லிம்களாய்ப் பெருகிவிட்டனர். இந்த பிரிட்டிஷார் காலத்தில் இஸ்லாம் வாளைக்கொண்டு பரவியதென்று கூற யாரேதுணிவர்? மேலும் முஸ்லிம்களின் படையெடுப் பில்லாத சீனுவில் 10 கோடி முஸ்லிம்களும், ஆப்பிரிக்கா, இங்கிலாந்து முதலிய இடங்களில் பெரும்பான்மையான முஸ்லிம்களும் பரவி வருவதற்கு வாளாயுதம் துணையாகுமா வென்று கேட்கின்றோம். ஆதலின், யாவரும் ஸமாஸமாய் உண்மை யுணர்ந்துவாழ எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் பாலிப்பானுக. வஸ்ஸலாம்.

ஸல்லல்லாஹு அலா முஹம்மதின் ஸல்லல்லாஹு
அலைஹிவ ஸல்லம்.

# சாந்தி நபி ஸல் பிறந்ததின வாழ்த்துப் பாக்கள்.

["லாயி லாஹ இல்லல் லாஹு" என்ற மெட்டு.]

### பல்லவி

நாளி தேநன் ஞளி தேநன் ஞய கத்தின் நாளிதே
நாளும் போற்றும் ஆதி தூதர் நாட்டில் வந்த நாளிதே.

### சரணங்கள்.

1. ஆதி தந்தை ஆதம் தம்மின் ஐம்பத் தோராம் முறையிலே
ஜோதி நபியாய் மக்கம் மீதில் தோன்றி வந்த நாளிதே. (நாளிதே)

2. பூமி மீதில் நபிகள் நாதர் போற்றும் அப்துல் லாவுக்கே
ஆமி ஞவின் பால ராக அவதரித்த நாளிதே. (நாளிதே)

3. வையம் எங்கும் கெட்டு மூட வழக்கம் ஓங்கி நின்றதால்
மெய்மைக் கூற நபிகள் நாதர் வெளியில் வந்த நாளிதே. (நாளிதே)

4. கல்லை மண்ணைக் கடவுள் என்று காத்து நின்ற மூடரை
நல்ல வழியில் ஆக்க எங்கள் நாதர் வந்த நாளிதே. (நாளிதே)

5. கள்ளை மதுவை உண்டு நெஞ்சம் கலங்கி நின்ற வீணரை
உள்ளம் தேற்றும் உண்மைத் தூதர் உலகில் வந்த நாளிதே. ( )

6. எற்றத் தாழ்வு வைத்து மக்கள் ஏங்கச் செய்த தீயரை
மாற்றம் நீக்கி வாழச் செய்த மன்னர் வந்த நாளிதே. (நாளிதே)

7. மாதர் தங்கள் பாக வீதம் மாறிடாமல் வாங்கவே
நீதம் செய்த எங்கள் வள்ளல் நிலத்தில் வந்த நாளிதே. (நாளிதே)

8. ஆண்கள் இழந்த பெண்கள் மணத்தல் ஆகு மென்று பாரிலே
ஆண்மை யோடு சட்டஞ் செய்த அண்ணல் வந்த நாளிதே. ( )

9. ஆதி ஏகன் தன்னைப் போற்றி அன்பு பூண்டு யாவர்க்கும்
நீதி செய்யச் சொன்ன மன்னர் நிலத்தில் வந்த நாளிதே. ( )

7A

10. ஆண்டு தோறும் மாதம் ஒன்றில் ஆகும் நோன்பு நோற
தாண்டி எங்கும் சாந்தி செய்த தூதர் வந்த நாளிதே. (ந

11. ஏழை வீதத் தோடு தானம் எங்கும் ஈயப் போற்றியே
ஏழை யோர்கள் வாழச் செய்த ஏந்தல் வந்த நாளிதே. (நாளிதே)

12. அன்பும் அருளும் சேர்ந்து பாரில் ஆகி வந்த தோற்றமாய்
இன்ப தீனுல் இஸ்லாம் தந்த ஏந்தல் வந்த நாளிதே. (நாளிதே)

13. பாலி யத்தில் ஏழை யேனும் பாக்கி யத்தில் மேன்மையாய்
வாலி பத்தில் வர்த்த கஞ்செய் வள்ளல் வந்த நாளிதே. (நாளிதே)

14. யுத்தஞ் செய்த வீர ராகி யூகம் பெற்ற நாதராய்
சுத்த ஞானம் யார்க்கும் ஓதும் தோன்றல் வந்த நாளிதே. ( )

15. மன்ன ராகி மாதர் தங்கள் மாண்ப ராகிப் பூமியில்
இன்னம் மேன்மை இறுதி நபியாய் ஏந்தல் வந்த நாளிதே. ( )

16. வேத ஜோதி பாரின் மீது வீசி எங்கும் மானிடர்
ஜாதி பேதம் நீங்கச் செய்த சாந்தர் வந்த நாளிதே. (நாளிதே)

17. பூமி எங்கும் ஏக தூதாய்ப் போற்ற வந்த நன்னபீ
காமி லாகச் சீர்திருத்தக் காட்சி தந்த நாளிதே. (நாளிதே)

18. ஆசை யோ டு பேசப் பேச வாச கத்திற் கின்பமாய்
நேச மிக்க ஊறும் எங்கள் நேசர் வந்த நாளிதே. (நாளிதே)

19. மாசி லாத நெஞ்சத் தோடு வாழ்த்த வாழ்த்த இன்பமாய்
நேசி யாத பேரும் போற்றும் நீதர் வந்த நாளிதே. (நாளிதே)


20. ஏற்ற வாரும் போற்ற வாரும் இன்பங் கொண்டு நண்பர்காள்!
போற்றிப் போற்றி வாழ்த்தத் தக்க போதர் வந்த நாளிதே. ( )

வஸ்ஸலாம்.

பாரதி பிரஸ், மன்னார்குடி.


# ...மெண்ட் காங்கிரட் & இரும்புத் தொழிற்சாலை.

இஞ்சினீயர்களால் சிபாரிஷ் செய்யப்பட்டவை.



[illegible]. சிமெண்ட் குழாய்கள் இணைந்திருக்கும் விதம்

## இந்தியத் தொழில்! இந்திய மூலதனம்! இந்தியர்களுடையதே!



எங்கள் சிமெண்ட் தொழிற்சாலையில் தையாராகின்ற குழாய்கள், தூண்கள், பலகைகள், பட்டியல் கற்கள், கவணை முளைகள் முதலியவைகளை உங்கள் அவசியத்திற் கெல்லாம் உபயோகியுங்கள்.


ஜலதாரைகளுக்குக் குழாய்களை உபயோகிப்பதால் செலவில் சிக்கனமும் உறுதியில் பலமுமாகின்றது. சிமெண்ட் தூண்களோ கருங்கல்லைவிட மலிவும் மரத்தைவிட அழகும் அத்துடனே உறுதியுமுள்ளதாய் உதவுகின்றன.

மற்றும் சிமெண்ட் காங்கிரட்டினால் குறடுகளுக்குப் பட்டியல் கற்களும், தளம்போட பலகைகளும், கேணி உறைகளும், கவணை முளைகளும், வயல் மடைகளுக்கான எல்லா ஸைஸ் குழாய்களும் உறுதியுடன் செய்யப்பெற்று ஏராளமாய் ஸ்டாக்கிலிருக்கின்றன.

தையாரிப்பவர்கள்:—

**P. K. முஹம்மது காசிம் பிரதர்ஸ்,**

**மன்னார்குடி.**



சோபாக்க

வும், சாய்ந்தும


வும், ஊஞ்சலாடவும்,


படுத்துக் கொள்ளவும்


உபயோகிக்கலாம்.



திண்டுக்கல் ஸைஸ் பூட்டுக்கள் உறுதியும் அழகும் வாய்ந்தன. பல ரகங்களில் தையாரிக்கப்படுகின்றன. விலையோ வெகுநயம்!







உத்திரவாத முள்ள மண் வெட்டிகளும், இருப்பு பாத்திரங்களில் அநேக ரகங்களும், மற்றும் தளவாட இரும்பு அடியல் சாமான்களும் தையாரிக்கப்படுகின்றன.. வியாபாரிகளுக்குத் தகுந்த லாபத்தைக் கொடுக்கக் கூடியன. வெளியூர் ஆர்டர்களை வெகு விமரிசையுடன் கவனிக்கப்படும்.

இங்ஙனம்,

**P. K. முஹம்மது காசிம் பிரதர்ஸ்,**

மன்னார்குடி.

அதாவது

# ஸன்மார்க்கப் பிரகாசம்.

ஓர் இனிய செந்தமிழ் மாதார்த்த சஞ்சிகை.

பத்திராதிபர்:— பாவலர், சி. மீ. முஹம்மது யூஸுப் ஸாஹிப்.

இந்த ஸஞ்சிகையின்கண் ஸன்மார்க்க விஷயங்கள், சற்குண ஒழுக்கங்கள், வேத நியதிகள், விவேக விளக்கங்கள், செய்யுட் ...ப்புக்கள், சிலேடைச் செம்மொழிகள், அகடவிகட ஹாஸ் ...ங்கள் அனைத்தும் மலிந்து மிளிர்கின்றன. அரியபல ஆராய்ச்சி வல்லுநர்களின் அழகிய கட்டுரைகளும் மார்க்க நுட்பங்களுஞ் செறிந்து திகழ்கின்றன. சுருங்கக் கூறுமிடத்து, இந்த மாத ஸஞ்சிகை வாலிபர் முதல் வயோதிகர்வரை யாவர்க்கும், அவர்கள் உலமாக்களானாலும், வித்வான்களானாலும், ஆங்கிலத்துறையில் இனிது பயின்ற அறிஞர்களானாலும், அன்றிக் கற்றோரானாலும் மற்றோரானாலும் அனைவர்க்கும் அவசியப்படத்தக்க விஷயங்களைத் தன்னிடத்தே பெற்று வெளிவருகின்றதென்றே கூறுவோம். சமய சமூகப் பாதுகாப்பிற்குவேண்டிய ராஜீய தேசிய விஷயங்கள் வெளிவருகிறது குறிப்பிடத்தக்கதாகும் இதன் வருஷ சந்தா உள்நாட்டிற்கு ரூ. 2 தான். பினாங்கு, சிங்கப்பூர் மலாய் முதலிய வெளிநாட்டிற்கு ரூ. 3. முன்பணம் அனுப்பிச் சந்தாதாரராய்ச் சேருங்கள். மாதிரிக் காப்பி இனாம்.

ஆசிரியர், ஷம்ஸுல் ஹுதா ஆபீஸ்,
மன்னார்குடி. (தஞ்சாவூர் ஜில்லா.)